# PAPER-II
# TAMIL

**Signature and Name of Invigilator**

1. (Signature) __________________________
   (Name) ____________________________
2. (Signature) __________________________
   (Name) ____________________________

OMR Sheet No. : ..............................................
(To be filled by the Candidate)

Roll No. | | | | | | | | |
(In figures as per admission card)

Roll No.______________________________
(In words)

| J | 2 | 6 | 1 | 6 |
|---|---|---|---|---|

Time : **1 1/4** hours] [Maximum Marks : **100**

Number of Pages in this Booklet : **12** Number of Questions in this Booklet : **50**

## Instructions for the Candidates

1. Write your roll number in the space provided on the top of this page.
2. This paper consists of fifty multiple-choice type of questions.
3. At the commencement of examination, the question booklet will be given to you. In the first 5 minutes, you are requested to open the booklet and compulsorily examine it as below :
   (i) To have access to the Question Booklet, tear off the paper seal on the edge of this cover page. Do not accept a booklet without sticker-seal and do not accept an open booklet.
   (ii) **Tally the number of pages and number of questions in the booklet with the information printed on the cover page. Faulty booklets due to pages/questions missing or duplicate or not in serial order or any other discrepancy should be got replaced immediately by a correct booklet from the invigilator within the period of 5 minutes. Afterwards, neither the Question Booklet will be replaced nor any extra time will be given.**
   (iii) After this verification is over, the Test Booklet Number should be entered on the OMR Sheet and the OMR Sheet Number should be entered on this Test Booklet.
4. Each item has four alternative responses marked (1), (2), (3) and (4). You have to darken the circle as indicated below on the correct response against each item.
   **Example :** ① ② ● ④
   where (3) is the correct response.
5. Your responses to the items are to be indicated in the **OMR Sheet given inside the Booklet only.** If you mark your response at any place other than in the circle in the OMR Sheet, it will not be evaluated.
6. Read instructions given inside carefully.
7. Rough Work is to be done in the end of this booklet.
8. If you write your Name, Roll Number, Phone Number or put any mark on any part of the OMR Sheet, except for the space allotted for the relevant entries, which may disclose your identity, or use abusive language or employ any other unfair means, such as change of response by scratching or using white fluid, you will render yourself liable to disqualification.
9. You have to return the Original OMR Sheet to the invigilators at the end of the examination compulsorily and must not carry it with you outside the Examination Hall. You are, however, allowed to carry original question booklet and duplicate copy of OMR Sheet on conclusion of examination.
10. **Use only Black Ball point pen provided by C.B.S.E.**
11. **Use of any calculator or log table etc., is prohibited.**
12. **There is no negative marks for incorrect answers.**

## परीक्षार्थियों के लिए निर्देश

1. इस पृष्ठ के ऊपर नियत स्थान पर अपना रोल नम्बर लिखिए ।
2. इस प्रश्न-पत्र में पचास बहुविकल्पीय प्रश्न हैं ।
3. परीक्षा प्रारम्भ होने पर, प्रश्न-पुस्तिका आपको दे दी जायेगी । पहले पाँच मिनट आपको प्रश्न-पुस्तिका खोलने तथा उसकी निम्नलिखित जाँच के लिए दिये जायेंगे, जिसकी जाँच आपको अवश्य करनी है :
   (i) प्रश्न-पुस्तिका खोलने के लिए पुस्तिका पर लगी कागज की सील को फाड़ लें । खुली हुई या बिना स्टीकर-सील की पुस्तिका स्वीकार न करें ।
   (ii) **कवर पृष्ठ पर छपे निर्देशानुसार प्रश्न-पुस्तिका के पृष्ठ तथा प्रश्नों की संख्या को अच्छी तरह चैक कर लें कि ये पूरे हैं । दोषपूर्ण पुस्तिका जिनमें पृष्ठ/प्रश्न कम हों या दुबारा आ गये हों या सीरियल में न हों अर्थात् किसी भी प्रकार की त्रुटिपूर्ण पुस्तिका स्वीकार न करें तथा उसी समय उसे लौटाकर उसके स्थान पर दूसरी सही प्रश्न-पुस्तिका ले लें । इसके लिए आपको पाँच मिनट दिये जायेंगे । उसके बाद न तो आपकी प्रश्न-पुस्तिका वापस ली जायेगी और न ही आपको अतिरिक्त समय दिया जायेगा ।**
   (iii) इस जाँच के बाद प्रश्न-पुस्तिका का नंबर OMR पत्रक पर अंकित करें और OMR पत्रक का नंबर इस प्रश्न-पुस्तिका पर अंकित कर दें ।
4. प्रत्येक प्रश्न के लिए चार उत्तर विकल्प (1), (2), (3) तथा (4) दिये गये हैं । आपको सही उत्तर के वृत्त को पेन से भरकर काला करना है जैसा कि नीचे दिखाया गया है :
   **उदाहरण :** ① ② ● ④
   जबकि (3) सही उत्तर है ।
5. प्रश्नों के उत्तर **केवल प्रश्न पुस्तिका के अन्दर दिये गये OMR पत्रक पर ही** अंकित करने हैं । यदि आप OMR पत्रक पर दिये गये वृत्त के अलावा किसी अन्य स्थान पर उत्तर चिह्नांकित करते हैं, तो उसका मूल्यांकन नहीं होगा ।
6. अन्दर दिये गये निर्देशों को ध्यानपूर्वक पढ़ें ।
7. कच्चा काम (Rough Work) इस पुस्तिका के अन्तिम पृष्ठ पर करें ।
8. यदि आप OMR पत्रक पर नियत स्थान के अलावा अपना नाम, रोल नम्बर, फोन नम्बर या कोई भी ऐसा चिह्न जिससे आपकी पहचान हो सके, अंकित करते हैं अथवा अभद्र भाषा का प्रयोग करते हैं, या कोई अन्य अनुचित साधन का प्रयोग करते हैं, जैसे कि अंकित किये गये उत्तर को मिटाना या सफेद स्याही से बदलना तो परीक्षा के लिये अयोग्य घोषित किये जा सकते हैं ।
9. आपको परीक्षा समाप्त होने पर मूल OMR पत्रक निरीक्षक महोदय को लौटाना आवश्यक है और परीक्षा समाप्ति के बाद उसे अपने साथ परीक्षा भवन से बाहर न लेकर जायें । हालांकि आप परीक्षा समाप्ति पर मूल प्रश्न-पुस्तिका तथा OMR पत्रक की डुप्लीकेट प्रति अपने साथ ले जा सकते हैं ।
10. **केवल C.B.S.E. द्वारा प्रदान किये गये काले बाल प्वाईंट पेन का ही इस्तेमाल करें ।**
11. **किसी भी प्रकार का संगणक (कैलकुलेटर) या लाग टेबल आदि का प्रयोग वर्जित है ।**
12. **गलत उत्तरों के लिए कोई नकारात्मक अंक नहीं हैं ।**



www.examrace.com

**TAMIL**
தமிழ்

**Paper-II**
தாள்-II

**Note** : This paper contains **fifty (50)** objective type questions of **two (2)** marks each. All questions are compulsory. **(50 × 2 = 100)**

**குறிப்பு :** இந்த வினாத்தாள் **ஐம்பது** (50) விடைதெரி வினாக்களைக் கொண்டது. ஒவ்வொரு வினாவுக்கும் உரிய மதிப்பெண்கள் **இரண்டு** (2). அனைத்து வினாக்களுக்கும் விடை தருக. **(50 × 2 = 100)**

**1.** இடையிடையே விட்டு விட்டு ஒருவழி நெடிலும். ஒருவழிக் குறிலுமாகச் செல்லும் பாவோசை.
(1) அகைப்பு வண்ணம் (2) தூங்கல் வண்ணம்
(3) ஏந்தல் வண்ணம் (4) முடுகு வண்ணம்

**2.** 'ஆங்காங்கு' என்பது
(1) பெயரடை (2) வினையடை
(3) இடைச் சொல் (4) வினைச்சொல்

**3.** பின்வரும் பட்டியலில் பொருந்தாதது
(1) பார்ப்பு (2) பறழ்
(3) குருளை (4) இரலை

**4.** 'சந்தனத்தில் செந்தழலும் நிலவில் நஞ்சும் பிறந்தது போலும் நும் சொற்கள்' என்பதில் பயிலும் அணி.
(1) அபூதவுமை (2) ஐயவுவமை
(3) கூடாவுவமை (4) விரோதவுவமை

**5.** வெண்பாவின் ஈற்றுச் சீரில் இடம் பெறுவது
(1) நாலசை (2) மூவசை
(3) ஓரசை (4) ஐயசை

**6.** பின்வரும் பட்டியலில் பொருந்தாதது
(1) சீவகசிந்தாமணி (2) சூளாமணி
(3) வளையாபதி (4) குண்டல கேசி

**7.** திருவாய் மொழிக்கு முதன் முதலில் உரை எழுதியவர்
(1) நஞ்சீயர் (2) நம்பிள்ளை
(3) வடக்குத் திருவீதிப் பிள்ளை (4) ஆளவந்தார்



www.examrace.com

**8.** ஞானதீபக் கவிராயர் என்னும் பட்டம் பெற்றவர்
(1) வேதநாயக சாஸ்திரியார்
(2) சூரிய நாராயண சாஸ்திரியார்
(3) சுப்பிரமணிய சாஸ்திரியார்
(4) ஆபிரகாம் பண்டிதர்

**9.** திரைப் படமாக வெளிவந்த புதினம்
(1) மண்ணாசை (2) வாடி வாசல்
(3) மோக முள் (4) சாயா வனம்

**10.** பின்வரும் பட்டியலில் பொருந்தாதது
(1) அல்லி அரசாணி மாலை
(2) இராமப்பய்யன் அம்மானை
(3) பவளக்கொடி மாலை
(4) ஏணி ஏற்றம்

**11.** 'நீத்து' என்பதில்
I. நீ - பகுதி
II. த் - இடைநிலை
III. த் - சந்தி
IV. உ - விகுதி
இவற்றுள்,
(1) I, II, III, IV - சரி (2) I, II, III - சரி
(3) II, III, IV - சரி (4) I, II, III, IV - சரியல்ல

**12.** செல்வம்
I. அற்கா இயல்பிற்று
II. கூத்தாட்டு அவைக் குழாத்தற்று
III. சிறப்பு ஈனுவது
IV. பேரா இயற்கை தருவது
இவற்றுள்,
(1) I, II, III, IV - சரி (2) I, III, IV - சரி
(3) II, III, IV - சரி (4) I, II, III, - சரி

**13.** தொல்காப்பியத்தின் படி முதுமொழி
I. ஒண்மை உடையது II. எண்மை கொண்டது
III. வண்மை மிக்கது IV. நுண்மை விளங்குவது
இவற்றுள்,
(1) I, II, III, IV - சரி (2) I, II, III - சரி
(3) I, II, IV - சரி (4) I, II, III, IV - சரியல்ல



www.examrace.com

**14.** நச்சினார்க்கினியர் முழுமையாக உரை எழுதியது.

I. குறுந்தொகை	II. கலித்தொகை

III. பத்துப் பாட்டு	IV. சீவகசிந்தாமணி

இவற்றுள்,

(1) I, II, III, IV - சரி	(2) II, III, IV - சரி

(3) I, II, III - சரி	(4) I, III, IV - சரி

**15.** ஜெர்மன் நாட்டிலிருந்து தமிழகம் வந்தவர்கள்,

I. சீகன் பால்கு	II. இராபர்ட் தெ. நொபிலி

III. பெப்ரீசியசு	IV. இரேனியசு

இவற்றுள்,

(1) I, II, III, IV - சரி	(2) I, II, III - சரி

(3) I, III, IV - சரி	(4) I, II, IV - சரி

**16.** அட்டமா சித்திகளுள் கூடுவிட்டுக் கூடு பாய்தலாவது :

I. பிராகாமியம்	II. ஈசத்துவம்

III. வசித்துவம்	IV. பிராப்தம்

இவற்றுள்,

(1) II, III, IV - சரியல்ல	(2) I, II, IV - சரியல்ல

(3) I, III, IV - சரியல்ல	(4) I, II, III, IV - சரியல்ல

**17.** விடுகதையின் வேறு பெயர்

I. பிசி	II. சொலவடை

III. வெடி	IV. புதிர்

இவற்றுள்

(1) I, II, III, IV - சரி	(2) I, II, III - சரி

(3) II, III, IV - சரி	(4) I, III, IV - சரி

**18.** உறுதிக்கூற்று (உ) : ஊடி உயங்காந்கால் உப்பு இன்றாம் காமம்.

காரணம் (கா) : புல்லாப் புலப்பது ஓர் ஆறு.

(1) (உ) சரி; (கா) சரியன்று	(2) (உ) சரியன்று; (கா) சரி

(3) (உ) சரி; (கா) சரி	(4) (உ) சரியன்று; (கா) சரியன்று

**19.** உறுதிக்கூற்று (உ) : இராமாயணம் போன்ற கதைகள் பாவைக் கூத்துக்களாக நடத்தப் படுகின்றன.

காரணம் (கா) : ஐந்தாறு பாவைகள் குழுவாகச் சேர்ந்து ஆடிப் பாடி அவற்றை நிகழ்த்துவர்.

(1) (உ) சரியன்று; (கா) சரி	(2) (உ) சரி; (கா) சரியன்று

(3) (உ) சரி; (கா) சரி	(4) (உ) சரியன்று; (கா) சரியன்று



www.examrace.com

20. உறுதிக்கூற்று (உ) : மாணிக்கவாசகர் திருவாசகத்தின் முடிவில் அச்சோப்பதிகம் பாடியுள்ளார்.
காரணம் (கா) : தான் பெற்ற இறை அனுபவத்தை அவர் அப்பதிகத்தில் வியந்துரைத்துள்ளார்.
(1) (உ) சரி; (கா) சரி (2) (உ) சரியன்று; (கா) சரி
(3) (உ) சரி; (கா) சரியன்று (4) (உ) சரியன்று; (கா) சரியன்று

21. உறுதிக்கூற்று (உ) : 'புலிகொல் யானை' என்புழித் தொழில் தடுமாற்றம் நிகழ்கிறது.
காரணம் (கா) : புலியைக் கொன்ற யானை, யானையால் கொல்லப்பட்ட புலி எனக் கவர்படுபொருள் தருகிறது அத்தொடர்.
(1) (உ) சரியன்று; (கா) சரி (2) (உ) சரி; (கா) சரியன்று
(3) (உ) சரியன்று; (கா) சரியன்று (4) (உ) சரி; (கா) சரி

22. உறுதிக்கூற்று (உ) : 'ஆ' என்னும் எழுத்தைக் குறிக்க 'ஆவன்னா' பயன்படுத்தப்படுகிறது.
காரணம் (கா) : அன்னா என்பது எழுத்துச் சாரியை.
(1) (உ) சரி; (கா) சரியன்று (2) (உ) சரியன்று; (கா) சரி
(3) (உ) சரியன்று; (கா) சரியன்று (4) (உ) சரி; (கா) சரி

23. உறுதிக்கூற்று (உ) : தளை என்பதற்குக் கட்டு என்று பொருள்.
காரணம் (கா) : அசைகள் ஒன்றோடு ஒன்று கட்டப்பட்டுப் பாக்களில் பயிலும்.
(1) (உ) சரியன்று; (கா) சரியன்று (2) (உ) சரி; (கா) சரி
(3) (உ) சரி; (கா) சரியன்று (4) (உ) சரியன்று; (கா) சரி

24. உறுதிக்கூற்று (உ) : புறநானூற்றில் பாடப்பட்டவரையும் பாடியவரையும் குறிக்கும் போது 'அவனை அவர் பாடியது' எனக் குறிக்கப்பட்டுள்ளது.
காரணம் (கா) : புலவரினும் புரவலரே அக்காலத்தில் மிகுதியும் போற்றப்பட்டனர்.
(1) (உ) சரி; (கா) சரியன்று (2) (உ) சரியன்று; (கா) சரி
(3) (உ) சரி; (கா) சரி (4) (உ) சரியன்று; (கா) சரியன்று

25. உறுதிக்கூற்று (உ) : உரையாசிரியர் எனச் சிறப்பாகக் குறிக்கப்படுபவர் இளம் பூரணரே.
காரணம் (கா) : தொல்காப்பியம் முழுமைக்கும் முதன் முதலில் உரை எழுதியவர் அவரே.
(1) (உ) சரியன்று; (கா) சரி (2) (உ) சரி; (கா) சரி
(3) (உ) சரி; (கா) சரியன்று (4) (உ) சரியன்று; (கா) சரியன்று


www.examrace.com

**26.** <u>உறுதிக்கூற்று</u> (உ) : "தமிழ் நிலை பெற்ற தாங்கரு மரபின் மகிழ்நனை மறுகின் மதுரை" என்கிறது சிறுபாணாற்றுப் படை.
<u>காரணம்</u> (கா) : மதுரை நகரில் முற்காலத்தில் தமிழ்ச் சங்கம் இருந்தது.
(1) (உ) சரி; (கா) சரியன்று
(2) (உ) சரியன்று; (கா) சரி
(3) (உ) சரி; (கா) சரி
(4) (உ) சரியன்று; (கா) சரியன்று

**27.** <u>உறுதிக்கூற்று</u> (உ) : 'கூத்தாடி கிழக்கே பார்ப்பான்; கூலிக்காரன் மேற்கே பார்ப்பான்' என்பது பழமொழி.
<u>காரணம்</u> (கா) : கூத்தாடும் போது தேவைப்படும் வெளிச்சத்திற்காகக் கதிரவன் தோன்றும் திசையைக் கூத்தாடியும், வெப்பம் தணிவதற்காக நிலா தோன்றும் திசையைக் கூலிக்காரனும் பார்ப்பார்கள்.
(1) (உ) சரியன்று; (கா) சரியன்று
(2) (உ) சரியன்று; (கா) சரி
(3) (உ) சரி; (கா) சரி
(4) (உ) சரி; (கா) சரியன்று

**28.** <u>நிரல்படுத்துக.</u>
குட்டிக்குரிய மரபுப்பெயர்கள் :
(1) மூங்கா, வெருகு, எலி, அணில்
(2) மூங்கா, எலி, அணில், வெருகு
(3) மூங்கா, வெருகு, அணில், எலி
(4) மூங்கா, எலி, வெருகு, அணில்

**29.** <u>நிரல்படுத்துக.</u>
நாலடியார் கூறும் நல்லுரையின் இலக்கணம் :
(1) பொழிப்பு, நுட்பம், நூலெச்சம், அகலம்
(2) பொழிப்பு, நுட்பம், அகலம், நூலெச்சம்
(3) பொழிப்பு, அகலம், நுட்பம், நூலெச்சம்
(4) பொழிப்பு, அகலம், நூலெச்சம், நுட்பம்

**30.** <u>நிரல்படுத்துக.</u>
தண்டி கூறும் சித்திர கவிகள் :
(1) கோமூத்திரி, கூடசதுர்த்தம், எழுத்துவருத்தனம், மாலைமாற்று
(2) கோமூத்திரி, கூடசதுர்த்தம், மாலைமாற்று, எழுத்துவருத்தனம்
(3) கோமூத்திரி, மாலைமாற்று, கூடசதுர்த்தம், எழுத்துவருத்தனம்
(4) கோமூத்திரி, மாலைமாற்று, எழுத்துவருத்தனம், கூடசதுர்த்தம்

**31.** <u>நிரல்படுத்துக.</u>
சிலம்பு கூறும் இசை நரம்புகள் :
(1) இணை, பகை, நட்பு, கிளை
(2) இணை, பகை, கிளை, நட்பு
(3) இணை, கிளை, நட்பு, பகை
(4) இணை, கிளை, பகை, நட்பு



www.examrace.com

**32.** <u>நிரல்படுத்துக.</u>

வேந்தர்க்கு ஒளியாவாரின் பண்புகள் :

(1) கொடை, அளி, செங்கோல், குடியோம்பல்

(2) கொடை, அளி, குடியோம்பல், செங்கோல்

(3) கொடை, செங்கோல், குடியோம்பல், அளி

(4) கொடை, செங்கோல், அளி, குடியோம்பல்

**33.** <u>நிரல்படுத்துக.</u>

வாய்மைக் குடிக்கு உரியன :

(1) நகை, ஈகை, இகழாமை, இன்சொல்

(2) நகை, ஈகை, இன்சொல், இகழாமை

(3) நகை, இன்சொல், ஈகை, இகழாமை

(4) நகை, இன்சொல், இகழாமை, ஈகை

**34.** <u>நிரல்படுத்துக.</u>

அரணின் இயல்புகள் :

(1) உயர்வு, திண்மை, அருமை, அகலம்

(2) உயர்வு, திண்மை, அகலம், அருமை

(3) உயர்வு, அகலம், அருமை, திண்மை

(4) உயர்வு, அகலம், திண்மை, அருமை

**35.** <u>நிரல்படுத்துக.</u>

அமைச்சரின் பணிகள் :

(1) கருவி, செய்கை, அருவினை, காலம்

(2) கருவி, செய்கை, காலம், அருவினை

(3) கருவி, காலம், செய்கை, அருவினை

(4) கருவி, காலம், அருவினை, செய்கை

**36.** <u>பொருத்துக:</u>

| | | | |
|---|---|---|---|
| (A) | தெற்கு | (I) | சத்தியோசாதம் |
| (B) | வடக்கு | (II) | தற்புருடம் |
| (C) | கிழக்கு | (III) | வாமம் |
| (D) | மேற்கு | (IV) | அகோரம் |

| | (A) | (B) | (C) | (D) |
|---|---|---|---|---|
| (1) | IV | III | II | I |
| (2) | IV | II | I | III |
| (3) | IV | III | I | II |
| (4) | IV | II | III | I |



www.examrace.com

**37.** <u>பொருத்துக:</u>

(A) பெருமிதம் (I) தாரமும் சுற்றமும் குடிப்பிறப்பும் முதலாயவற்றுக்கண் கேடு சூழ்தல்

(B) தறுகண் (II) யாறும் குளனும் காவும் ஆடிப் பதியிகந்து வருவதல்

(C) குடிகோள் (III) எல்லாரோடும் ஒப்ப நில்லாது பேரெல்லையாக நிற்றல்

(D) விளையாட்டு (IV) அஞ்சுதகக் கண்ட இடத்து அஞ்சாமை

| | (A) | (B) | (C) | (D) |
|---|---|---|---|---|
| (1) | IV | II | III | I |
| (2) | IV | III | I | II |
| (3) | IV | II | I | III |
| (4) | IV | III | II | I |

**38.** <u>பொருத்துக:</u>

(A) பெருங்கதை (I) 3 காண்டங்கள்

(B) கம்பராமாயணம் (II) 5 காண்டங்கள்

(C) பெரியபுராணம் (III) 6 காண்டங்கள்

(D) தேம்பாவணி (IV) 2 காண்டங்கள்

| | (A) | (B) | (C) | (D) |
|---|---|---|---|---|
| (1) | II | IV | III | I |
| (2) | II | IV | I | III |
| (3) | II | III | IV | I |
| (4) | II | III | I | IV |

**39.** <u>பொருத்துக:</u>

(A) பக்திசாரன் (I) திருமங்கையாழ்வார்

(B) வகுளாபரணன் (II) பெரியாழ்வார்

(C) விட்டுணு சித்தன் (III) நம்மாழ்வார்

(D) பரகாலன் (IV) திருமழிசையாழ்வார்

| | (A) | (B) | (C) | (D) |
|---|---|---|---|---|
| (1) | IV | II | III | I |
| (2) | IV | II | I | III |
| (3) | IV | III | I | II |
| (4) | IV | III | II | I |

**40.** <u>பொருத்துக:</u>

(A) ஆக்கம் தருவது (I) வினை நலம்

(B) வேண்டிய எல்லம் தருவது (II) ஆள்வினை

(C) பெண்ணேவல் செய்வார்கண் இல்லாதது (III) துணைநலம்

(D) குடி உயர்த்துவது (IV) அறவினை

| | (A) | (B) | (C) | (D) |
|---|---|---|---|---|
| (1) | III | II | IV | I |
| (2) | III | II | I | IV |
| (3) | III | IV | I | II |
| (4) | III | I | IV | II |



www.examrace.com

**41.** <u>பொருத்துக:</u>

| | | | |
|---|---|---|---|
| (A) | அசனிப் புலவர் | (I) | மசாலா இலக்கியம் |
| (B) | சையது முகமது ஆலிம் | (II) | படைப்போர் இலக்கியம் |
| (C) | அப்துல் காதர் சாகிபு | (III) | முன ஜாத்து |
| (D) | வண்ணப் பரிமளப் புலவர் | (IV) | கிஸ்ஸா இலக்கியம் |

| | (A) | (B) | (C) | (D) |
|---|---|---|---|---|
| (1) | II | III | I | IV |
| (2) | II | IV | III | I |
| (3) | II | III | IV | I |
| (4) | II | IV | I | III |

**42.** <u>பொருத்துக:</u>

| | | | |
|---|---|---|---|
| (A) | அருண்மொழித் தேவர் | (I) | திருமங்கை யாழ்வார் |
| (B) | கலியன் | (II) | பட்டினத்தார் |
| (C) | திருவெங்காடர் | (III) | மாணிக்கவாசகர் |
| (D) | திருவாதவூரர் | (IV) | சேக்கிழார் |

| | (A) | (B) | (C) | (D) |
|---|---|---|---|---|
| (1) | IV | I | II | III |
| (2) | IV | II | III | I |
| (3) | IV | I | III | II |
| (4) | IV | II | I | III |

**43.** <u>பொருத்துக:</u>

| | | | |
|---|---|---|---|
| (A) | குரங்கு | (I) | போத்து |
| (B) | மக்கள் | (II) | பறழ் |
| (C) | நவ்வி | (III) | குழவி |
| (D) | ஓர் அறிவு உயரி | (IV) | மறி |

| | (A) | (B) | (C) | (D) |
|---|---|---|---|---|
| (1) | II | III | I | IV |
| (2) | II | I | III | IV |
| (3) | II | IV | III | I |
| (4) | II | I | IV | III |

**44.** <u>பொருத்துக:</u>

| | | | |
|---|---|---|---|
| (A) | வீழிறாலை | (I) | பனை |
| (B) | போத்துக்கால் | (II) | தாழை |
| (C) | பெண்ணை | (III) | தென்னை |
| (D) | கைதை | (IV) | கரும்பு |

| | (A) | (B) | (C) | (D) |
|---|---|---|---|---|
| (1) | IV | III | I | II |
| (2) | IV | III | II | I |
| (3) | IV | I | II | III |
| (4) | IV | I | III | II |



www.examrace.com

45. பொருத்துக:

(A) தென்றல் (I) காமனின் யானைப் படை
(B) இருள் (II) காமனின் தேர்ப் படை
(C) கிளி (III) காமனின் காலாட் படை
(D) பெண்கள் (IV) காமனின் குதிரைப் படை

| | (A) | (B) | (C) | (D) |
|---|---|---|---|---|
| (1) | II | IV | III | I |
| (2) | II | III | I | IV |
| (3) | II | I | IV | III |
| (4) | II | I | III | IV |

**(46–50)** பின்வரும் செய்யுளைப் படித்து அதன் கீழ்க்காணும் வினாக்களுக்கு உரிய விடைகளைத் தெரிவு செய்க :

வான்வரை மேற்குத் திக்கை
மறைத்திட்ட புகைநீ லத்தைத்
தேன்கண்டாற் போலே கண்டேன்
திகழ்காடு நோக்கிச் சென்றேன்

வன்மைகொள் பருக்கைக் கல்லின்
வழியெல்லாம் பள்ளம், மேடு !
முன்னாக இறங்கி ஏறி
முதலைகள் கிடப்ப தைப்போல்
சின்னதும் பெரிது மான
வெடிப்புக்கள் தாண்டிச் சென்றேன்
“கன்மாடம்” எனும்பு றாக்கள்
கற்களைப் பொறுக்கக் கண்டேண்

மகிழ்ந்துநான் ஏகும் போதில்
காடுதன் மயிலை ஏவி
அகவலால் வரவேற் பொன்றை
அனுப்பிற்று கொன்றைக் காய்க்கு
நிகரான வாலை ஆட்டிக்
காரொலி நின்று நின்று
நகர்ந்தது கூடச் சென்றேன்
நற்பாதை காட்டும் என்றே

முகத்திலே கொடுவாள் மீசை
வேடன் என் எதிரில் வந்தான்
அகப்பட்ட பறவை காட்ட,
அவற்றின் பேர் கேட்டேன் ! வேடன்
வகைப்பட்ட பரத்து வாசன்
என்பதை வலியன் என்றான்;
சகோதரத்தைச் செம்போத் தென்றான் !
தமிழா நீ வாழ்க என்றேன்



www.examrace.com

செருத்தி, யாச்சா, இலந்தை,
தேக்கீந்து கொன்றை யெல்லாம்
பெருங்காட்டின் கூரை ! அந்தப்
பெருங்கூரை மேலே நீண்ட
ஒரு மூங்கில்; இரு குரங்கு
கண்டேன் பொன்னூசல் ஆடல் !
குருந்தடை யாளம் கண்டேன் !
கோணல்மா மரமும் கண்டேன் !

இழந்தபெட் டையினைக் கண்டே
எழுந்தோடும் சேவல் வாலின்
கொழுந்துபட் டெழுந்த கூட்டக்
கொசுக்களை முகில்தான் என்று
தழைந்ததன் படம் விரிக்கும்
தனிமயிலால், அடைத் "தேன்"
வழிந்திடும்; கரடி வந்து
மயிலுக்கு வாழ்த்துக் கூறும்.

**46.** <u>பொருத்துக:</u>

| | | | |
|---|---|---|---|
| (A) | எலிவால் | (I) | மேகம் |
| (B) | கொசுக்கூட்டம் | (II) | கொடுவாள் |
| (C) | முதலை | (III) | கொன்றைக் காய் |
| (D) | மீசை | (IV) | வெடிப்பு |

| | (A) | (B) | (C) | (D) |
|---|---|---|---|---|
| (1) | III | IV | I | II |
| (2) | III | I | IV | II |
| (3) | III | IV | II | I |
| (4) | III | II | IV | I |

**47.** <u>நிரல்படுத்துக.</u>

(1) இலந்தை, தேக்கு, கொன்றை, ஈந்து
(2) இலந்தை, தேக்கு, ஈந்து, கொன்றை
(3) இலந்தை, கொன்றை, தேக்கு, ஈந்து
(4) இலந்தை, ஈந்து, கொன்றை, தேக்கு

**48.** <u>உறுதிக்கூற்று</u> (உ) : தமிழா, நீ வாழ்கென வேடனை வாழ்த்துகிறார் கவிஞர்.

<u>காரணம்</u> (கா) : பரத்துவாசன் என வலியனை வேடன் தமிழ்ப் பெயரால் சுட்டுகிறான்.

(1) (உ) சரி; (கா) சரி
(2) (உ) சரியன்று; (கா) சரி
(3) (உ) சரி; (கா) சரியன்று
(4) (உ) சரியன்று; (கா) சரியன்று

**49.** காற்றும் சருகும் சேர்ந்து காட்டுவது

(1) வசை
(2) வீரம்
(3) அன்பு
(4) இசை

**50.** கவிஞரை வரவேற்கச் செய்தது

(1) காடு
(2) மயில்
(3) காரொலி
(4) கரடி



www.examrace.com

**Space For Rough Work**

Exam Race



www.examrace.com